**ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்**
**அவசரக் கூட்டம்**

**2021 ம் ஆண்டு செப்டம்பர்** ***மாதம்*** **09 ம்** ***நாள் வியாழக்கிழமை பிற்பகல்*** **4.00** ***மணியளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.***

***முன்னிலை :- திருமதி. D. மல்லிகா, B.Sc,***
***தனி அதிகாரி.***

**பொருள் எண் : 198**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம், ந.க.எண் 35871/2021/E1, Date: 08.09.2021 கடிதத்தில் மின்சார சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ள நகராட்சிகளில் திட்ட அறிக்கையின்படி ஏற்கனவே உள்ள தெரு விளக்குகளுக்கு பதிலாக LED விளக்குகள் பொருத்த மதிப்பீடு தயார் செய்து அனுப்ப கோரப்பட்டுள்ளது. அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் பின்வரும் தெரு விளக்குகளுக்கு பதிலாக LED விளக்குகள் பொருத்த மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள தெரு விளக்குகளை IGA பரிந்துரைப்படி LED விளக்குகளாக மாற்றம் செய்தல். ( 2568 விளக்குகள் ) | 70.00 |

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 5627/2021/E1

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 199**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம், ந.க.எண் 14006/2021/T2-2, Date: 08.09.2021 சென்னை கடிதத்தில் 2021-22 ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட வேண்டும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் LPG தகன மேடை அமைக்க விரிவான திட்ட அறிக்கை அனுப்ப கோரப்பட்டுள்ளது. அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் பின்வரும் பணி மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மதுரை சாலையில் உள்ள பொது மாயனத்தில் நவீன LPG தகன மேடை அமைத்தல். | 150.00 |

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 5643/2021/E1

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 200</u>**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம், ந.க.எண் 20028/2021/தி2-2, Dated 08.09.2021 கடிதத்தில் 2021-22 ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் மாநகராட்சி, நகராட்சி பேரூராட்சிகளில் பொது மக்களின் நலனுக்காகவும் குறிப்பாக சிறுவர்களுக்காகவும் 3096 விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளதாகவும் நடப்பாண்டில் 552 பூங்காக்கள் ரூ.122 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் நகராட்சியில் பூங்காக்கள் மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை அனுப்ப கோரப்பட்டுள்ளது. அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் பின்வரும் பூங்காக்கள் மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நல்லகுற்றாலபுரம் தெரு பூங்கா மேம்படுத்துதல் ( T.S. Ward No2, Block No 26, T.S.No. 2377) | 45.00 |
| 2 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி என்.ஜி.ஓ. காலனி பூங்கா மேம்பாடு செய்தல் ( T.S. Ward No5, Block No 4, T.S.No. 42) | 24.50 |
| 3 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி என்.ஜி.ஓ. காலனி பூங்கா மேம்பாடு செய்தல் ( T.S. Ward No5, Block No 4, T.S.No. 49) | 18.00 |
| | மொத்தம் | 87.50 |

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 5644/2021/E1

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 201</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான ஒன்பது ஆண்டுகளுக்கு உரிம ஆணை வழங்கிய கடைகளுக்கு ஒவ்வொரு மூன்றாண்டு உரிம காலம் முடிந்தவுடன் மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை புதுப்பித்து வாடகையில் 15% வாடகை உயர்வு செய்து கொள்ள அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 03.07.2007 ன் படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான அட்டவணையில் கண்டுள்ள கடை வாடகைதாரர்கள் மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து தருமாறு புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளார். எனவே அரசாணையின்படி கீழ்கண்டுள்ள கடை வாடகைதாரர்களுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து உரிமம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கடை வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | கடை உரிமம் முடியும் காலம் | கடை உரிமம் புதுப்பிக்க வேண்டிய காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்டுள்ள வாடகை |
|---|---|---|---|---|---|---|
| பெரியார் வணிக வளாகம் திறந்த வெளிக் கடைகள் | | | | | | |
| 1 | 130/267 | திரு. ராமர் | 31.03.21 | 01.04.2021 முதல் 31.03.2014 | ரூ.1521/- | ரூ.1750/- |
| 2 | 130/259 | திரு. ரத்தினக்குமார் | 31.08.21 | 01.09.2021 முதல் 31.08.2014 | ரூ.1800/- | ரூ.2070/- |
| 3 | 130/257 | திரு. ரத்தினக்குமார் | 31.08.21 | 01.09.2021 முதல் 31.08.2014 | ரூ.1800/- | ரூ.2070/- |
| 4 | 130/263 | திரு. கருப்பையா | 31.03.21 | 01.04.2021 முதல் 31.03.2014 | ரூ.1058/- | ரூ.1220/- |

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

வரிசை எண் 1 முதல் 4 வரை கண்டுள்ள கடைகளின் வாடகையினை 15% உயர்வு செய்யலாம்.

**ந.க.எண் 3707/2018/அ2**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 202</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 67 K 0312 மினி லாரிக்கு தகுதிச் சான்று மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் நாள் 05.07.2021 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 18.08.2021 ம் தேதி கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. கீழ்க்கண்டவாறு மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

| வ.எண் | வேலைகளின் விபரம் | விலை விகிதம் | |
|---|---|---|---|
| | | Raj Paul Auto Mobiles Works Near R.C. Church, By Pass Road Srivilliputtur.626 125 | J.S.P Auto Mobiles works, Rajapalayam road, Thirupakadal west, Srivilliputtur 626 125. |
| 1 | TN 67 K 0312 மினி லாரிக்கு தகுதிச் சான்று பெறும் பணி | 46000 | 48000 |

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.46,000/- கொடுத்துள்ள Raj Paul Auto Mobiles Works Near R.C. Church, By-pass road, Srivilliputtur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந. க. எண் 3684/2021/H2.**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

**2021 ம் ஆண்டு செப்டம்பர் *மாதம்* 30 ம் *நாள் வியாழக்கிழமை பிற்பகல்* 4.00 *மணியளவில் நடைபெற்ற* *சாதாரணக்* *கூட்ட நடவடிக்கைகள்.***

*முன்னிலை :- திருமதி.* ***D.*** *மல்லிகா,* ***B.Sc,***
*தனி அதிகாரி.*

**பொருள் எண் : 203**

நகராட்சி பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் மேம்பாடு அடைய நீர் நிலைகளை புணரமைப்பு செய்து மழைநீர் சேகரிப்பு பணி மேற்கொள்ளும் வகையில் ஊரணி, குளம் தேர்வு செய்து புணரமைப்பு மேற்கொள்வதற்கு உரிய திட்ட பிரேரணை அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 01.09.2021 ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி தமிழக அரசு நிதி ஒதுக்கீடு கோரி பின்வரும் பணிகளுக்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான சக்கரைக்குளம் சுற்றியுள்ள குடியிருப்புகள் மூலம் மழைநீர் சேகரிப்பு செய்தல் மற்றும் நீர் நிலை மேம்பாடு செய்தல் | 18.00 |
| 2 | இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான திருப்பாற்கடல் குளத்தை கரைகள் பலப்படுத்தி நீர் நிலை மேம்பாடு செய்தல். | 82.00 |
| | மொத்தம் | 100.00 |

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான நீர் நிலை ஏதும் இல்லை. மேற்கண்ட இரு நீர் நிலைகளும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு நாச்சியார் ( ஆண்டாள் ) திருக்கோவிலுக்கு சொந்தமானதாகும். நகராட்சி பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் மேம்பாடு அடைய மேற்கண்ட நீர் நிலைகள் மேம்பாடு செய்ய வேண்டியது அவசியமாகும். நீர் நிலைகள் மேம்பாடு செய்ய தடையின்மை சான்று கோரி அருள்மிகு நாச்சியார் ( ஆண்டாள் ) திருக்கோயில் செயல் அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு நீர்நிலைகள் மேம்பாடு செய்து புணரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.

**ந. க. எண் 6107/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 204**

நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு Toner வாங்க 09.09.2021 ம் தேதி பின்வரும் மூன்று நிறுவனங்களில் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ.எண் | பணி விவரம் | சன் சிஸ்டம்ஸ் | | K.B. சிஸ்டம்ஸ் சர்வீஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | | டிஜி டெக் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Toner -15 | 1500 | 22500 | 1575 | 23625 | 1650 | 24750 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி ஒப்புக் கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** குறைந்த விலைப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந. க. எண் 5480/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 205**

நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு K7 Anti Virus வாங்க 09.09.2021 ம் தேதி பின்வரும் மூன்று நிறுவனங்களில் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ.எண் | பணி விவரம் | ஸ்டார் சிஸ்டம்ஸ் சர்வீஸ், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் | | Genious, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் | | Rathan Computers, சிவகாசி. | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | K7 Anti Virus 25 User | 24500 | 24500 | 24700 | 24700 | 24900 | 24900 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்டார் சிஸ்டம்ஸ் சர்வீசஸ், சிவகாசி நிறுவனத்தின் விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி ஒப்புக் கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** குறைந்த விலைப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந. க. எண் 5479/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 206**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் 24 கணிணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது, கணிணிகளை பாதுகாப்பாக இயக்க Anti Virus மென்பொருள் வாங்கி பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். எனவே அலுவலகத்தில் 24 கணிணிகளுக்கும் K7 Anti Virus வாங்க வேண்டியுள்ளது. எனவே Anti Virus வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.25,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந. க. எண் 5479/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 207**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக HP மற்றும் Canon 137/337/737 கணிணி பிரிண்டர்களுக்கு டோனர்கள் அலுவலகத்தில் இருப்பு இல்லை. எனவே அலுவலக உபயோகத்திற்கு 15 டோனர்கள் வாங்க வேண்டியுள்ளது. எனவே டோனர்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.22,500/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந. க. எண் 5480/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 208**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ல் பிரிவு 306 உட்பிரிவு 5 (2) மற்றும் உட்பிரிவு 6 (1920 தமிழ்நாடு சட்டம் 5-ல் ) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகளின்படியும் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் FSTP திட்டத்திற்கான வரைவு உபவிதிகள் தயார் செய்யப்பட்டு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 21978-19/2020/பா.சா.தி-2,

நாள் 04.02.2021 ன் படி பொது அங்கீகாரம் ( General Approval ) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வரைவு உபவிதிகளை பொது மக்களுக்கு தெரியப்படுத்தவும் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்களை 30 நாட்களுக்குள் தெரிவிக்கக்கோரி விருதுநகர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்வு அலுவலர் மூலமாக பின்வரும் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | வெளியிடப்பட்ட நாள் |
|---|---|---|
| 1 | தினபூமி | 11.02.2021 |
| 2 | Trinity Mirror | 11.02.2021 |

விளம்பரம் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்கு மேல் ஆகிய பின்னரும் பொது மக்களிடம் இருந்து ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்கள் ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்கண்ட FSTP திட்டத்திற்கான வரைவு உப விதிகளை விருதுநகர் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான கட்டணம் ஒரு பக்கத்திற்கு ரூ.2100 வீதம் மொத்தம் 44 பக்கங்களுக்கு ரூ.92400 அரசு கணக்கில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று தொகை செலுத்தப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந. க. எண் 1505/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 209**

2017-18 ம் ஆண்டிற்கான TURIP திட்டத்தின் கீழ் பின்வரும் பணியினை மேற்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை, ந.க.எண் 21422/2017/E3, நாள் 03.10.2017 ன் படி நிர்வாக அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் | செலவு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் சக்கரைக்குளம் தெரு, ரயில்வே பீடர் ரோடு, சந்தியக் கிணற்றுத் தெரு, கிருஷ்ணா நகர் சாலைகள் மற்றும் வாழைக்குளம் தெருவில் தார்தளம் அமைத்தல் மற்றும் கோவிந்தன் நகர் காலனி தெருவில் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 200.00 | 2,08,24,243 |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை 4.81 சதவீதம் அதிகமாக நகர்மன்ற தீர்மான எண் 616 நாள் 28.02.2018 ல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு விட்டது. அதன்படி இருப்பதால் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களிடம் பணிமுடிவு அறிக்கை ரூ.2,08,24,243/- தொகைக்கு ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. எனவே கூடுதல் தொகை ரூ.8,24,243/- ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-**

ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.89 சதவீதம் அதிகமாக அனுமதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் பணியின் செலவுத் தொகை ரூ.2,08,24,243/- ஏற்பட்டுள்ளதை அனுமதிக்கலாம். கூடுதல் தொகை 5 சதவீதத்திற்குள் இருப்பதால் பணிமுடிவு அறிக்கைக்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்கள் ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. எனவே கூடுதல் தொகை ரூ.8,24,243/- ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 6286/2017/இ1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 210**

அலுவலக ஈப்பு வாகனம் TN-67-K-5862 வாகனத்திற்கு காப்பீடு 04.10.2021 உடன் முடிவடைகிறது. எனவே வாகனத்தினை தொடர்ந்து இயக்க 05.10.2021 முதல் 04.10.2022 வரை ஒரு ஆண்டிற்கு காப்பீடு செய்யவும் அதற்காக யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு காப்பீட்டுத் தொகை ரூ.13,246/- செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-**

அனுமதி வழங்கலாம். 04.10.2021 ல் காப்பீடு முடிவடைவதை கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று காப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 5642/2021/ இ1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 211**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பராமரிப்பில் உள்ள குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வரும் பகிர்மானக் குழாய்கள், சுலீஸ் வால்வு 150 எண்ணம், ஏர் வால்வு 6 எண்ணம் வருடாந்திர பராமரிப்புப்பணி மேற்கொள்வதற்கும் அதற்காக ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10,00,000/- ( ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) செலவு செய்யவும் நகர்மன்ற தீர்மான எண் 88 நாள் 25.02.2021 ன் படி ஒப்புதல் பெறப்பட்டது. எனினும் ஏப்ரல் 2021 முதல் ஆகஸ்ட் 2021 வரை பைப் லைன் பொருட்கள் கொள்முதல் பெறப்பட்டு முடிக்கப்பட்டு விட்டது. எனவே செப்டம்பர் 2021 முதல் மார்ச் 2022 வரை மட்டுமே பணி செய்ய வேண்டியுள்ளதால் மொத்த செலவுத் தொகை ரூ.10,00,000/ க்கு பதில் ரூ.6,00,000/- போதுமானது என்பதால் மதிப்பீட்டுத் தொகை குறைக்கப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:—**

அனுமதி வழங்கலாம். பணியினை குடிநீர் விநியோக நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 5488/2021/ இ1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 212**

குடிநீர் விநியோக தலைமை நீரேற்று நிலைய செண்பகத்தோப்பில் உள்ள மின் இணைப்பு எண் 518 ல் உள்ள 7.5 எச்.பி. மோட்டார் பழுதடைந்துள்ளது. மோட்டாரில் ரீ வைண்டிங் செய்து கன் மெட்டல் புஸ், திரஸ்ட் பேடு, பேரிங், பேனல் போர்டு, 4 கோர் 7/20 கேபிள் 10 மீட்டர் ஆகிய பொருள்கள் புதியது மாற்றி திரும்ப மாட்டுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பழுது வேலைகள் செய்யவும் அதற்கான செலவுத் தொகை ரூ.18,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:—**

அனுமதி வழங்கலாம். குடிநீர் விநியோக அவசரம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 5529/2021/ இ1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 213</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக கொரோனா பாதித்த நபர்கள் உள்ள வீடுகள் இடைய பொட்டல் தெரு பகுதிகளில் கட்டுப்பாட்டு பகுதி ஏற்படுத்த தமிழக அரசு உத்திரவின்படி தடுப்புகள் ( Barricading ) ஏற்படுத்த வேண்டியுள்ளது. அவசர அவசியம் கருதி ரூ.30,000/- மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ள நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு. அ. பாபு மூலம் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

பதிவு செய்யலாம். **(ந.க.எண் 3318/2021/ இ1)**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 214</u>**

15 வது நிதிக்குழு 2020-21 முதல் ஒதுக்கீடு பணிகளில் வரிசை எண்; 2 பணியான கோட்டைப்பட்டி தண்ணீர் தேக்கத்தொட்டி தரைமட்டத்தில் இருந்து அனைத்து தூண்களும் பீம்களும் பழுதான நிலையில் உள்ளதை வலுப்படுத்தும் பணிக்கு 25-08-2021 தேதி இரண்டு உறைகள் முறையில் ( Two cover system) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | தொழில் நுட்ப தகுதி |
|---|---|---|
| 1 | திரு கே.அழகர், ஒப்பந்தக்காரர், அருப்புக்கோட்டை. | தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளது. |
| 2 | திருமதி ஜி.ஏ.முத்துலட்சுமி, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. |
| 3 | திரு பா.முத்துக்குமாரசாமி, ஒப்பந்தக்காரர், இராஜபாளையம். | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு கே.அழகர், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மட்டும் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதால் 16-09-2021 ம் தேதி விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது. திரு கே.அழகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.95% அதிகமாக உள்ளதால் விலைவிகிதம் குறைத்துக்கொடுக்க ( Negotiation) அறிவிப்பு அனுப்பப்பட்டது. திரு கே.அழகர் தனது 20-09-2021 ம் தேதிய கடிதத்தில் வரிசை எண்; 6 இனத்திற்கு விலை விகிதம் குறைத்துக்கொடுத்துள்ளார். அதன் காரணமாக விலைவிகிதம் மதிப்பீட்டைவிட 4.77% அதிகமாக உள்ளது. மேலும் விலைவாசி ஏற்றத்தாலும் வேலையாட்கள் கூலி உயர்வாலும் இதர இனங்களுக்கு விலை விகிதம் குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார். பொறியியல் பிரிவு நடைமுறை நூல் பிரிவு 2.7.2 பக்கம் எண்; 9 ன் படி 5 சதவீதம் வரை மதிப்பீட்டினை விட அதிகமாக உள்ள விலை விகித ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே திரு கே.அழகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.77% அதிகமாக உள்ளதை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1) மேற்கண்ட பணியினை ரூ 29,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்;68 நாள் 25-02-2021 ன்படி நிர்வாக அனுமதிபெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கே.அழகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.77% அதிகமாக உள்ளதை ஒப்புக்கொள்ளலாம்.

**(ந. க. எண் 7101/2020/ இ1)**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண் : 215**

15 வது நிதிக்குழு 2020-21 முதல் ஒதுக்கீடு பணிகளில் வரிசை எண்; 3 பணியான சாத்தூர் சாலை 200 mm DI K7 feeder main, அசோக் நகர் பிரதான சாலை, அசோக்க நகர் குறுக்குத்தெரு 1 மற்றும் 2 ரெங்கநாதபுரம் பிரதான சாலை மற்றும் தெற்குப்புறம் குறுக்குத்தெரு, அய்யம் பட்டி குறுக்குத்தெரு, பெருமாள் பட்டி குறுக்குத்தெரு, மடத்துப்பட்டி குறுக்குத்தெருக்கள், மல்லபுரம் தெரு குறுக்குத்தெரு, கம்மாப்பட்டி குறுக்குத்தெரு மற்றும் வாழைக்குளம் குறுக்குத்தெருக்களில் 90 mm PVC distribution main அமைத்தல் பணிக்கு 25-08-2021 தேதி இரண்டு உறைகள் முறையில் ( Two cover system) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | தொழில் நுட்ப தகுதி |
|---|---|---|
| 1 | திருமதி ஜி.ஏ.முத்துலட்சுமி,<br>ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளது. |
| 2 | திரு எஸ்.கற்பகவேல்,<br>ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி ஜி.ஏ.முத்துலட்சுமி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மட்டும் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதால் 16-09-2021 ம் தேதி விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது. திருமதி ஜி.ஏ.முத்துலட்சுமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.95% அதிகமாக உள்ளதால் விலைவிகிதம் குறைத்துக்கொடுக்க ( Negotiation) அறிவிப்பு அனுப்பப்பட்டது. திருமதி ஜி.ஏ.முத்துலட்சுமி தனது 20-09-2021 ம் தேதிய கடிதத்தில் வரிசை எண்; 18 இனத்திற்கு விலை விகிதம் குறைத்துக்கொடுத்துள்ளார். அதன் காரணமாக விலைவிகிதம் மதிப்பீட்டைவிட 4.82% அதிகமாக உள்ளது. மேலும் விலைவாசி ஏற்றத்தாலும் தளவாட சாமான்கள் விலைவாசி உயர்வினாலும் வேலையாட்கள் கூலி உயர்வாலும் இதர இனங்களுக்கு விலை விகிதம் குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார். பொறியியல் பிரிவு நடைமுறை நூல் பிரிவு 2.7.2 பக்கம் எண்; 9 ன் படி 5 சதவீதம் வரை மதிப்பீட்டினை விட அதிகமாக உள்ள விலை விகித ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே திருமதி ஜி.ஏ.முத்துலட்சுமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.82% அதிகமாக உள்ளதை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட பணியினை ரூ 40,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்;68 நாள் ;25-02-2021 ன்படி நிர்வாக அனுமதிபெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி ஜி.ஏ.முத்துலட்சுமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.82% அதிகமாக உள்ளதை ஒப்புக்கொள்ளலாம்.

**(ந. க. எண் 7101/2020/ இ1)**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 216**

15 வது நிதிக்குழு 2020-21 முதல் ஒதுக்கீடு பணிகளில் வரிசை எண்; 1 பணியான மதுரை சாலையில் (150 mm DI K7) feeder main அமைத்தல், பண்டிட் ஜவஹர்லால் நேரு சாலை (200 mm DI K7) feeder main அமைத்தல் மற்றும் மதுரை சாலை தெற்குப்புறம் 4 குறுக்குத்தெருக்கள், ஓம்சக்தி நகர், பாரதி நகர், தன்யா நகர் காளையார் குறிச்சித்தெரு மற்றும் சக்தி நகர் பகுதிகளில் distribution main (90 mm PVC 6 Ksc) அமைத்தல் பணிக்கு 25-08-2021 தேதி இரண்டு உறைகள் முறையில் ( Two cover system) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | தொழில் நுட்ப தகுதி |
|---|---|---|
| 1 | திரு எஸ்.கற்பகவேல்,<br>ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளது. |
| 2 | திருமதி ஜி.ஏ.முத்துலட்சுமி,<br>ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு எஸ்.கற்பகவேல், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மட்டும் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதால் 16-09-2021 ம் தேதி விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது. திரு எஸ்.கற்பகவேல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.95% அதிகமாக உள்ளதால் விலைவிகிதம் குறைத்துக்கொடுக்க ( Negotiation) அறிவிப்பு அனுப்பப்பட்டது. திரு எஸ்.கற்பகவேல் தனது 20-09-2021 ம் தேதிய கடிதத்தில் வரிசை எண்; 19 இனத்திற்கு விலை விகிதம் குறைத்துக்கொடுத்துள்ளார். அதன் காரணமாக விலைவிகிதம் மதிப்பீட்டைவிட 4.84% அதிகமாக உள்ளது. மேலும் கட்டுமான பொருள்கள் விலை அதிகமாக உள்ளதால் இதர இனங்களுக்கு விலை விகிதம் குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார். பொறியியல் பிரிவு நடைமுறை நூல் பிரிவு 2.7.2 பக்கம் எண்; 9 ன் படி 5 சதவீதம் வரை மதிப்பீட்டினை விட அதிகமாக உள்ள விலை விகித ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே திரு எஸ்.கற்பகவேல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.84% அதிகமாக உள்ளதை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்கண்ட பணியினை ரூ31,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்;68 நாள் ;25-02-2021 ன்படி நிர்வாக அனுமதிபெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ்.கற்பகவேல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.84% அதிகமாக உள்ளதை ஒப்புக்கொள்ளலாம்.

**(ந. க. எண் 7101/2020/ இ1)**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண் : 217

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி குடிநீர் விநியோக தலைமை நீரேற்று நிலைய செண்பகத்தோப்பில் உள்ள மின் இணைப்பு எண்; 518 ல் உள்ள 7.5 எச். பி. மோட்டார் ரீவைண்டிங் செய்து கன் மெட்டல் புஸ், திரஸ்ட் பேடு, பேரிங், பேனல் போர்டு , 4 கோர் 7/20 கேபிள் 10 மீட்டர் ஆகிய பொருள்கள் புதியது மாற்றி திரும்ப மாட்டுதல் பணிகள் மேற்கொள்ள 13-09-2021 ம் தேதி பின்வரும் மூன்று நிறுவனங்களில் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ. எண். | பணி விவரம். | திரு எம்.முத்துராம கிருஷ்ணன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | செல்வம் எலக்ட்ரிகல்ஸ், ஸ்ரீவில்லிப்புத்தூர். | | திரு தங்கவேல், ஸ்ரீவில்லிப்புத்தூர். | |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | 7.5 HP மோட்டார் கழற்றி ரீவைண்டிங் செய்து கன் மெட்டல் புஸ், திரஸ்ட் பேடு, பேரிங், பேனல் போர்டு , 4 கோர் 7/20 கேபிள் 10 மீட்டர் ஆகிய பொருள்கள் புதியது மாற்றி திரும்ப மாட்டுதல் பணிகள் மேற்கொள்ள | 18000 | 18000 | 19800 | 19800 | 20790 | 20790 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.முத்துராம கிருஷ்ணன், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-**

அவசர அவசியம் கருதி திரு எம்.முத்துராம கிருஷ்ணன் என்பவரின் குறைந்த விலைப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**(ந. க. எண் 5529/2021/ இ1)**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 218**

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரி செய்தல், வால்வு சரி செய்தல் மேல் நிலை தொட்டிகள் சுத்தம் செய்தல் ( செப்டம்பர் 2021 மாதம் முதல் மார்ச் 2022 வரை ) பணியினை ரூ 6,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 23-09-2021 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு அ.சடையப்பன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2 | திரு கோ.வெங்கடேசன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர். | மதிப்பீட்டைவிட 2.63% அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு அ.சடையப்பன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :-**

1 ) மேற்கண்ட பணியினை ரூ 6,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு அ.சடையப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புளியினை ஒப்புக்கொள்ளலாம்.

**(ந. க. எண் 5488/2021/ இ1)**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 219**

2021-22 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகத்துறை அறிவிப்பில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் ரூ 75 கோடி மதிப்பீட்டில் புதிய கழிப்பறைகள் கட்டுவதுடன் 450 பழைய கழிப்பறைகள் ரூ 23 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்பின்படி ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் பின்வரும் இரண்டு கழிப்பிடங்கள் புணரமைப்பு செய்ய பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பணியின் பெயர். | மதிப்பீட்டுத்தொகை ரூ லட்சத்தில் |
|---|---|---|
| 1 | முதலியார்பட்டி தெரு சமுதாய கழிப்படம் பழுதுபார்க்கும் பணி. | 13.50 |
| 2 | ரெங்கநாதபுரம் சாலைத்தெரு சமுதாய கழிப்பிடம் பழுதுபார்க்கும் பணி. | 6.00 |
| | மொத்தம் | 19.50 |

**அலுவலகக்குறிப்பு:–**

அனுமதி வழங்கலாம். **(ந.க.எண் 6108/2021/ இ1)**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 220</u>**

நகராட்சி அலுவலக குடிநீர் டேங்கர் வாகனத்தில் தகுதி சான்று பெற பழுது வேலைகள் மேற்கொள்ள 11-08-2021 ல் பின்வரும் 3 விலைப்புள்ளிளிள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பழுது வேலைகள் விவரம் | RA 267 ஸ்ரீவி பிளாக் அக்ரோ இன்சினியரிங். | SP SPL 166 வத்திராயிருப்பு அக்ரோ இன்சினியரிங். | SP SPL 167 இராஜபாளையம் பிளாக் அக்ரோ இன்சினியரிங். |
|---|---|---|---|---|
| 1 | ஆயில் சர்வீஸ் செய்தல், புதியதாக ஆயில் பில்டர், டீசல் பில்டர் மற்றும் பிரேக் ஆயில் மாற்றுதல் | ரூ.43000/- | ரூ.44450/- | ரூ.44200/- |
| 2 | வாகனத்தில் கலர் புதுப்பித்தல் மற்றும் நம்பர் பிளேட் புதுப்பித்தல். | | | |
| 3 | மாசுக்கட்டுப்பாடு சான்றிதழ் பெற்று தருதல் | | | |
| 4 | நான்கு வீல் சீரியஸ் பேக் செய்தல் | | | |
| 5 | கியர் பாக்ஸ், கிரவுன் ஆயில் மாற்றுதல் | | | |
| 6 | வாகனத்தில் வெல்டிங் வேலைகள், பிரேக் செக்கப் செய்தல் | | | |
| 7 | வீல் கிரீஸிங் நிப்பிள் கிரிஸிங் செய்தல் | | | |
| 8 | ஸ்டிக்கர் ஒட்டி தகுதி சான்று பெற்று கொடுத்தல் | | | |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள RA 267 ஸ்ரீவி பிளாக் அக்ரோ இன்சினியரிங், ஸ்ரீவில்லிப்புத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி ஒப்புக்கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

குறைந்த விலைப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4647/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 221</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மடவார்விளாகம் பகுதியில் இயங்கி வரும் நுண்உரக்குடில் மையத்தை ஸ்ரீவி சாரிட்டபிள் டிரஸ்ட் என்ற பெயரில் செயல்பட்டு வரும் தொண்டு நிறுவனத்தின் மூலம் நகர் மன்றத் தீர்மான எண் 820 நாள் 31.12.2021 ன் படி 04.01.2021 முதல் மூன்றாண்டுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் பராமரித்திட அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி நுண் உரக்குடில் மையத்தில் இயந்திரத்தின் மூலம் மக்கும் கழிவுகள் அரைத்து உரத்தயாரிப்பு பணி நடைபெறாமல் திறந்த வெளியில் மக்கும் கழிவுகளை கொட்டி வைத்தும், உரக்குடில் மையத்தில் வேறு பணிகள் நடைபெற்று வந்தது, இதனால் மழை பெய்யும் பொழுது கழிவுகளிலிருந்து துர்நாற்றம் மற்றும் கொசுக்கள், ஈக்கள் அதிகளவு பெருகி மக்களுக்கு ஆரோக்கிய கேடு ஏற்பட காரணமாக அமைந்ததால் அருகாமையில் உள்ள குடியிருப்பு பகுதியிலிருந்து புகார்கள் அடிக்கடி வரப்பெற்றன. மேலும் இது தொடர்பாக உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் மனுவும் பெறப்பட்டு மேற்படி குறைபாடுகளை சரி செய்தும், சுகாதார கேடு ஏற்படாமலும் நுண் உரக்குடிலை சுகாதார முறையில் பராமரிக்குமாறு ஸ்ரீவி சாரிட்டபிள் டிரஸ்ட்,

தொண்டு நிறுவனத்திற்கு 21.06.2021 ம் தேதிய அறிவிப்பு மூலம் அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மடவார்விளாகம் பகுதியில் இயங்கி வரும் நுண் உரக்குடில் மையத்தை தவிர்க்க முடியாத காரணங்களால் தொடர்ந்து நடத்துவதற்கு இயலாது என தெரிவித்து நுண் உரக்குடிலை 09.10.2021 முதல் மீண்டும் திரும்ப ஒப்படைப்பதாக ஸ்ரீவி சாரிட்டபிள் டிரஸ்ட் தொண்டு நிறுவனம் 28.09.2021 ம் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1 ) பார்வையிட்டு மன்றம் முடிவு செய்யலாம்.

2) நகராட்சி நிர்வாகம் மற்றும் சுகாதாரம் நலன் கருதி ஸ்ரீவி சாரிட்டபிள் டிரஸ்ட் தொண்டு நிறுவனத்திற்கு வழங்கிய ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் இந்நகராட்சி பணியாளர்களை வைத்து மேற்படி பணியை தொடரவும் அனுமதிக்கலாம்.

**(ந. க. எண் 2021/ இ1)**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 222</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள வாகன எண் TN-67-K-4717 ஆட்டோவுக்கு தகுதிச் சான்று 07.10.2021 ல் முடிவடைகிறது. மேற்படி ஆட்டோ வாகனத்திற்கு 2021-22 ம் ஆண்டிற்கு வாகன தகுதிச்சான்று பெற வேண்டிய அவசியம் கருதி பழுது நீக்கம் பணி மேற்கொள்ளவும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று பெறும் அனைத்து பணிக்கும் டெண்டர் கோரி நடவடிக்கை எடுக்கவும் உத்தேச செலவினம் ரூ.18,000/- ஐ நகராட்சி பொது நிதி 2021-22 ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1 ) அனுமதிக்கலாம்.

2 ) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும்.

( ந.க.எண் 5656/2021/H2 )

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 223</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் 2020-21 ம் ஆண்டிற்கான வருவாய் மூலதன நிதி, குடிநீர் வழங்கல்நிதி மற்றும் கல்வி நிதிக்கான கணக்குளை தணிக்கைக்கு ஏதுவாக தயார் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற வழிகாட்டுதலின்படியும் அரசாணை எண் ( M.S.No.187) நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் குடிநீர் வழங்குதுறை MA2 நாள் 23.12.15 ன் படி உள்ளாட்சி நிதி கணக்குகளை பட்டைய கணக்கரை வைத்து ஆண்டு கணக்குகள் தயார் செய்ய தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் திரு. வி. சீனிவாசன் பட்டைய கணக்கரை வைத்து ஆண்டு கணக்குகள் தயார் செய்த வகையில் செலவினத் தொகை ரூ.35,000/- வழங்க கோரியுள்ளதால் மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண் 5049/2012/B1 )

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண் : 224**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம் வடபுறம் அமைந்துள்ள கட்டிடம், முன்னாள் படை வீரர் நலன் அலுவலகம் அமைந்திருந்த இடத்தில் தரைத்தளத்தில் 15 எண்ணம் கடைகள் முதல் தளத்தில் 15 எண்ணம் கடைகள் அமைத்து மாத வாடகை முறையில் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்ற தீர்மான எண் 12 நாள் 29.01.2021 ல் அனுமதிக்கப்பட்டதன்படி தரைத்தளம் கடை எண் 14 க்கு 16.09.2021 ம் தேதி கேட்கப்பட்ட ஏலக் கேள்விகள் மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் அதிக பட்ச ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி. தி. இராஜேஸ்வரி | ஒருவரும் கலந்து கொள்ளவில்லை | ரூ. 4500/- |
| 2 | திரு. அ. உதயசூரியன் | | ரூ. 4000/- |

**அலுவலகக்குறிப்பு :-**

வரிசை எண் 1 ல் கண்டுள்ள திருமதி. தி. இராஜேஸ்வரி என்பவரின் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4500/- ஐ ஏற்கலாம்.
( ந.க.எண் 307/2021/A2 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 225**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம் வடபுறம் அமைந்துள்ள கட்டிடம், முன்னாள் படை வீரர் நலன் அலுவலகம் அமைந்திருந்த இடத்தில் தரைத்தளத்தில் 15 எண்ணம் கடைகள் முதல் தளத்தில் 15 எண்ணம் கடைகள் அமைத்து மாத வாடகை முறையில் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்ற தீர்மான எண் 12 நாள் 29.01.2021 ல் அனுமதிக்கப்பட்டதன்படி தரைத்தளம் கடை எண் 12 க்கு 16.09.2021 ம் தேதி கேட்கப்பட்ட ஏலக் கேள்விகள் மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் அதிக பட்ச ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி. தி. இராஜேஸ்வரி | ஒருவரும் கலந்து கொள்ளவில்லை | ரூ. 4500/- |
| 2 | திரு. அ. உதயசூரியன் | | ரூ. 4000/- |

**அலுவலகக்குறிப்பு :-**

வரிசை எண் 1 ல் கண்டுள்ள திருமதி. தி. இராஜேஸ்வரி என்பவரின் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4500/- ஐ ஏற்கலாம்.
( ந.க.எண் 307/2021/A2 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 226**

விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 362/செ.ம.தொ.அ/2021 நாள் 17.09.2021 ம் தேதிய கடிதத்தில் தினமலர் நாளிதழில் 14.10.2021 தொழில் மலர் 2021 ல் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 268/செ.ம.தொ.அ/2021 நாள் 22.07.2021 ம் தேதிய கடிதத்தில் தினகரன் நாளிதழ் சார்பில் ஆயுத பூஜை தொழில் மலர் 2021 வெளி வரவுள்ள தொழில் மலர்களில், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பாக விளம்பரங்களை வெளியிட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கோவிட்-19 தடுப்பு பணிகள் பற்றிய விவரங்கள் மற்றும் விழிப்புணர்வு குறித்த செய்திகளை தினமலர் மற்றும் தினகரன் நாளிதழ்களின் தொழில் மலர் 2021 ல் விளம்பரம் செய்வதற்கும், அதற்குண்டான விளம்பர கட்டணத்தை பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி விளம்பரம் மேற்கொண்டதையும், விளம்பரக் கட்டணம் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

( ந.க.எண் 5713/2021/H1 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 227**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2021-22 ம் ஆண்டிற்கு திருத்திய வருடாந்திர பங்குத் தொகை ரூ.75,000/- செலுத்த இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் 30.07.2021 ம் தேதிய ந.க.எண் 130/21/அ2 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2021-22 ம் ஆண்டிற்கு வருடாந்திர பங்குத் தொகை ரூ.75,000/- செலுத்த அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

( ந.க.எண் 5335/2021/C1 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 228**

விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 318/செ.ம.தொ.அ/2021 நாள் 16.08.2021 ம் தேதிய கடிதத்தில் மாலைமலர் மற்றும் மாலை முரசு நாளிதழ் சார்பில் தொழில் மலர் 2021 வெளி வரவுள்ளதால், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பாக விளம்பரங்களை வெளியிட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கோவிட்-19 தடுப்புப் பணிகள் பற்றிய விளம்பரங்கள் மற்றும் விழிப்புணர்வு குறித்த செய்திகளை மாலைமலர் மற்றும் மாலை முரசு நாளிதழில் தொழில் மலர் 2021 விளம்பரம் செய்வதற்கும், அதற்குண்டான விளம்பர கட்டணத்தை பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி விளம்பரம் மேற்கொண்டதையும், விளம்பரக் கட்டணம் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

( ந.க.எண் 2648/2021/H1 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 229**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ந.க.எண் 2187/2021/ஆ2, நாள் 25.08.2020 ன் படி திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள 19 நகராட்சிகளில் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்களை தனியார் வழியில் ( Out Source ) மூலம் நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி 10.07.2021 தி. இந்து மற்றும் முரசொலி ( தமிழ்நாடு பதிப்பு ) செய்தி தாள்களில் விளம்பரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்காணும் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான மொத்த செலவுத் தொகை ரூ.104252/- திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள 19 நகராட்சிகள் சார்பாக கோவில்பட்டி நகராட்சி மூலம் ( Moulis advertising service private Ltd, Chennai) முதலில் சென்னை செய்தித்தாள் நிறுவனத்திற்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ.104252/- ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதர 18 நகராட்சிகள் தங்கள் பங்குத் தொகை ரூ.5487/- ஐ கோவில்பட்டி நகராட்சி ஆணையருக்கு வங்கி வரைவோலை அல்லது காசோலையாக அனுப்பி ஒப்புதல் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பங்குத் தொகை ரூ.5487/- ஐ கோவில்பட்டி நகராட்சிக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

( ந.க.எண் 5413/2017/H1 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 230**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்திற்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடத்தினில் மக்களின் தேவைக்கு பேருந்து நிலையத்திற்கு அருகில் India 1 ATM பூத் அமைக்க அனுமதி வழங்கும்படி ஜெயம் டிஸ்டிரிபியூட்டர்ஸ் அவர்களின் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளதன்படி, இந்நகராட்சி பேருந்து நிலையத்தின் வெளி பகுதியில் அரசு பொது மருத்துவமனை முன்பு உள்ள தற்காலிக ஆட்டோ நிறுத்தம் பகுதியில் 10 x 6 என்ற அளவில் ATM பூத் அமைப்பதற்கும், மேற்கண்ட ATM பூத்திற்கு மாத வாடகை ரூ.1800/- + GST சேர்த்து நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு:-**

நகராட்சிக்கு கூடுதல் வருவாயினை எதிர்நோக்கி அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண் 4518/2021/A2 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 231**

விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 354/செ.ம.தொ.அ/2021 நாள் 08.09.2021 ம் தேதிய கடிதத்தில் இந்து தமிழ் திசை நாளிதழ் ஆயுத பூஜையை முன்னிட்டு தொழில் வளர்ச்சி மலர் 2021ல் வெளி வரவுள்ள தொழில் மலர்களில், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பாக விளம்பரங்களை வெளியிட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கோவிட்-19 தடுப்புப் பணிகள் பற்றிய விவரங்கள் மற்றும் விழிப்புணர்வு குறித்த செய்திகளை இந்து தமிழ் திசை நாளிதழ் ஆயுத பூஜையை முன்னிட்டு தொழில் மலர் 2021ல் விளம்பரம் செய்வதற்கும், அதற்குண்டான விளம்பர கட்டணத்தை பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி விளம்பரம் மேற்கொண்டதையும், விளம்பரக் கட்டணம் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
   ( ந.க.எண் 5713/2021/H1 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 232**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட என்.பி.எஸ். காலனியில் அமைந்துள்ள தூய்மை பணியாளர்களுக்கான குடியிருப்பு எண் 6 ( 130/ 1022) மற்றும் குடியிருப்பு எண் 18 ( 130/1034 ) ல் குடியிருந்து வரும் திருமதி. கிருஷ்ணம்மாள் ( பிரிவு 4 ) மற்றும் திருமதி. தனலட்சுமி ( பிரிவு 3) ஆகியோர் மேற்கண்ட குடியிருப்பானது தனது உறவினர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தூய்மை பணியாளர்களாக பணிபுரிந்து பணியிடை மரணமடைந்து அன்னாரின் வாரிசு என்ற அடிப்படையில் தான் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பணிபுரிந்து வருவதாகவும் தற்சமயம் மேற்கண்ட குடியிருப்பில் தான் வசித்து வருவதாகவும் மேற்கண்ட குடியிருப்பிற்கான மாத வாடகையினை தன்பெயரில் செலுத்த அனுமதி வழங்கும்படி கடிதம் அளித்துள்ளதன்படியும், மேற்கண்ட இரண்டு தூய்மை பணியாளர்களும் தங்களது பிரிவில் பணிபுரிந்து வருவதாக சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு வழங்கியுள்ளனர். வருவாய் ஆய்வாளரின் 17.09.2021 ம் தேதிய குறிப்பில் மேற்கண்ட தூய்மை பணியாளர்களுக்கான குடியிருப்பு வாடகையானது பல வருடங்களாக மாத வாடகை ரூ.60/– மட்டுமே வசூல் செய்யப்பட்டு வருகின்றது எனவும் அதனால் மேற்கண்ட தூய்மை பணியாளர்களுக்கான குடியிருப்பு வாடகையினை மாதம் ஒன்றிற்கு ரூ.500/- என நிர்ணயம் செய்யவும் பரிந்துரை செய்துள்ளார். எனவே தூய்மை பணியாளர்கள் குடியிருப்புக்கான மாத வாடகை ரூ.500/- நிர்ணயம் செய்யவும், மேற்கண்ட குடியிருப்புகளில் தற்சமயம் வசித்து வரும் நகராட்சி தூய்மை பணியாளர்கள் பெயரில் வாடகை நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு:-**

நகராட்சிக்கு கூடுதல் வருவாயினை எதிர்நோக்கி அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண் 3707/2021/A2 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 233**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி சுகாதார பிரிவில் இயங்கி வரும் கீழ்வரும் அட்டவணையில் உள்ள வாகனங்களுக்கு வாகன காப்பீடு VEHICLE INSURANCE 2020-21 ஆம் ஆண்டிற்கு காப்பீடு புதுப்பிக்க வேண்டியுள்ளது. வாகன காப்பீடு புதுப்பித்தல் கட்டணம் பட்டியல் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வாகனத்தின் பதிவு எண் / பெயர் | வாகன காப்பீடு புதுப்பித்தல் காலம் முடிவு 2019-20 | வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டிய காலம் 2020-21 | செலுத்த வேண்டிய வாகன காப்பீடு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | TN-84-J-3915 TATA ACE | 14.10.2020 – 13.10.2021 | 14.10.2021 – 13.10.2022 | 19185.00 |
| 2 | TN-84-J-3964 TATA ACE | 14.10.2020 – 13.10.2021 | 14.10.2021 – 13.10.2022 | 19185.00 |
| 3 | TN-84-J-4902 TATA ACE | 31.10.2020 – 30.10.2021 | 31.10.2021 – 30.10.2022 | 19185.00 |
| 4 | TN-84-J-4923 TATA ACE | 31.10.2020 – 30.10.2021 | 31.10.2021 – 30.10.2022 | 19185.00 |
| | | | Total | 76740.00 |

மேற்காண் வாகனங்களுக்கு வாகன காப்பீடு VEHICLE INSURANCE 2020-21 ஆம் ஆண்டிற்கு காப்பீடு புதுப்பிக்கவும் காப்பீட்டுத் தொகையை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்திற்கு காப்பீட்டு கட்டணம் நகராட்சி பொது நிதியின் கீழ் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

( ந.க.எண் 5629/20207/H2 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 234**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு வடபுறம் அமைந்துள்ள முன்னாள் படை வீரர் நலன் அலுவலகம் கடந்த 20.11.2020 முதல் காலி செய்யப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட இடத்தில் வாடகை முறையில் அமையவிருந்த கனரா வங்கியும் தனது ஒப்பந்தத்தினை ரத்து செய்து விட்டதாலும் நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு நகராட்சியின் வருவாயினை பெருக்கும் வகையில் மேற்கண்ட இடத்தினில் தரைத்தளத்தினில் 15 கடைகள் மற்றும் முதல் தளத்தில் 15 கடைகள் அமைத்து வாடகை முறையில் குத்தகைக்கு விடும் பொருட்டு மேற்கண்ட கடைகளுக்கு ( Pre Auction ) முன் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விடுவதற்கும் முன் பொது ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கும் ஆகும் விளம்பர கட்டணம் வழங்குவதற்கு மன்ற தீர்மான எண் 12, நாள் 29.01.2021 ன் படி அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன்படி மேற்கண்ட இடத்தினில் தரைத்தளத்தில் கடை எண் 8 தவிர மீதமுள்ள 14 கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மேற்கண்ட கடைகளை குத்தகைதாரருக்கு ஒப்படைப்பு செய்ய நடவடிக்கையில் இருந்து வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட கட்டிடத்தின் இடது பக்கம் காலியாக உள்ள பெரிய அறையில் மூன்று கடைகள் அமைத்து ( தரைத்தளம் கடை எண் 16, 17 மற்றும் 18) அமைத்து மாத வாடகை முறையில் குத்தகைக்கு விட மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

நகராட்சிக்கு கூடுதல் வருவாயினை எதிர்நோக்கி அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண் 307/2021/A2 )

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**